# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | தங்கையன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.07.2025.

**311 குவிமுச மனுவின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீங்கள் என்ன படித்துள்ளிரகள் என்றால் 3 ம் வகுப்பு படித்துள்ளேன் தமிழில் நன்றாக எழுத படிக்க தெரியாது எனறால் படிப்பேன் எழுத தெரியாது. புகார் யார் எழுதியது என்றால் தெரிந்தவர் எழுதி தந்தார். யார் எழுதியது என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் வெளியில் இருந்தவர் எழுதி கொடுத்தார். சுமார் எத்தனை மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் 11.00 மணிக்கு. கையில் அடிப்பட்டதாக சொல்லப்படும் சகோதரி வெகு நாட்களுக்கு பிறகு அன்று தான் முதல் நாள் வேலைக்கு சென்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.
2. தங்கைக்கும் அவர் கணவருக்கு பிரச்சனை ஏற்பட்டு இருவரும் தனியாக தனியாக இருந்த விவரம் தெரியுமா என்றால் அது போன்று இல்லை. தங்கை வேலை செய்யும் கம்பெனி சிறு தொழில் செய்யும கம்பெனி என்றால் சரிதான். அந்த மாதிரி மிசின்கள் அனைத்து பெரிய பெரிய பண்ணை வீட்டில் மாடுகளிள் தீவனத்தை வெட்டுவதற்கும் பயன்படுத்துவதை பார்த்துள்ளிர்கள் என்றால் சரிதான். அந்த மில்லில் என்ன உள்ளது என்ற விவரம் தெரியாது

என்றாலும் உள்ளே சென்றது இல்லை என்றாலும் சரிதான்.

3. உங்கள் தங்கைக்கு மட்டையை எடுத்து செல்லும் வேலை மட்டும் தான் கொடுத்ததார்கள் என்றாலும் மிசினை பயன்படுத்தும் வேலை கொடுக்கவில்லை என்றாலும் இல்லை., மிசினில் அரைக்கும் வேலையிலும் செய்வார். மட்டை அரைக்கும் வேலையை நேரில் பார்த்துள்ளிர்கள் என்றால் அன்றை தினம் பார்த்தேன்.
4. அந்த மிசினில் இரண்டு பல் சக்கரத்திற்கு இடையில்மட்டை கொடுத்தால் மெதுவாக சுற்றும் அமைப்பில் அரைக்கும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அந்த தேங்காய் மட்டையை கொடுக்கும் போது மட்டை 1 அடிநீளம் இருக்கும் என்றால் ¾ அடி இருக்கும், 8–9 இன்ச் இருக்கும். அந்த மட்டையின் நுனியை பிடித்து மிசினில் விடும் போது மிசின் ஏற்று கொண்டு அரைக்கும் என்றால் சரிதான். அந்த மிசினில் வேலை செயயும் போது கவனக்குறைவாக மட்டையை கொடுக்கும் போது கை தவறுதலாக மாட்டும் என்றால் அது மட்டும் காரணம் இல்லை.
5. உங்கள் தங்கைக்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் தங்கையின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவும் காரணமில்லை என்றாலும் உங்கள் தங்கைக்கு கொடுக்காத வேலையை செய்து விபத்தை ஏறபடுத்தி கொண்டார் என்றாலும் சரியல்ல. புகாரில் உள்ள விவரம் தெரியாது என்றால் தெரியும். விவசாயம் பணியில் கற்பகம் சொல்லியும் உங்கள் தங்கை ஆர்வகோளாறாக மிசினை ஆப்ரேட் செய்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல.
6. விபத்து ஏற்படுத்திய உடன் எதிரி கம்பெனிகாரர் தான் கங்கா மருத்துவமனையில் உங்கள் தங்கையை சேர்த்தார் என்றால் சரிதான். அவரோடு சொந்த செலவில் 3–3.5 லட்சம் செலவு செய்து உங்கள் சகோதரிக்கு மருத்துவ செலவு செய்தார் என்றால் ஓனர் தான் பார்த்து மருத்துவ செலவு செய்தார். விவசாய பயன்பாட்டிற்கு கொண்டு வரும் மிசினில் கீழே On, Off பட்டன் இருக்கும் என்றாலும் அது தெரியாமல் உங்கள் தங்கை பார்க்காமல் விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றாலும் ஆனால் அந்த மிசினில் இல்லை, தூரத்தில் On ,Off பட்டன் இருந்ததால் பட்டன்கள் தெரியவில்லை, அதனால் கை மாட்டிக் கொண்டு கட்டாகி விட்டது.
7. எதிரியான கம்பெனிகாரர் செய்தது போதாமல் பல கட்சி காரர்களை அழைத்து சென்று கம்பெனியை மூட காரணமாக இருந்திர்கள் என்றால் அப்படி இல்லை. சொன்ன மாதிரி நீங்கள் சம்பவ இடத்திற்கு இல்லாத நிலையில் , On Off பட்டன் தூரத்தில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால்

இல்லை. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் உங்கள் தங்கையின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் சொல் பேச்சு கேட்காததும் தான் காரணம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com B,L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமராவதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.07.2025.

**<u>311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வெகு நாட்கள் கழித்து சம்பவ நடந்த தேதியன்று அன்று தான் முதல் நாள் வேலைக்கு சென்றிர்கள் என்றால் ஒரு வாரம் லீவ் எடுத்துவிட்டு அன்று தான் போனேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் 6 மாதம் கழித்து அன்று தான் மட்டை எடுக்கும் வேலைக்கு அமர்த்தினார்கள் என்றாலும் இல்லை. ஏற்கனவே மில்லில் கற்பகம் கொண்ட 2 நபர்கள் அந்த வேலையை செய்து வந்தார்கள் என்றாலும் உங்களை மட்டையை அள்ளி மாற்றும் பணிக்காக அமர்த்தப்பட்டிர்கள் என்றாலும் இல்லை. நான் சொல்லி தான் அவர்கள் வேலையை கற்று கொண்டார்கள்.
2. வேலைக்கு செல்லும் போது வளையல் அணிவது வழக்கம்என்றால் மிசினில் வேலை செய்யும் போது வளையல் போட கூடாது. ஆனால் அந்த தேதியில் வளையல் போட்டுட்டு கவனக்குறைவாக மிசினை ஆப்ரேட் செய்திர்கள் என்றால் இல்லை. அவர்கள் தான் செய்ய சொன்னார்கள்.வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.
3. அந்த மிசினில் இரண்டு பல் சக்கரத்திற்கு இடையில் மட்டை

கொடுத்தால் மெதுவாக சுற்றும் அமைப்பில் அரைக்கும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். அந்த அமைப்பில் 10–15 இன்ச் நீளமுள்ள மட்டை எடுத்து கொடுக்கும்போது மட்டையை அரைக்கும் என்றால் ஆமாம், மிசின் வேகமாக சுற்றும். மட்டை மிசினில் மட்டையை நுனியை பிடித்து தள்ளினால் அதுவாக எடுத்துக் கொள்ளும் என்றால் மட்டையை கவிழ்த்து கொடுத்தால் மிசின் அதுவாக எடுத்துக் கொள்ளும். அதே மட்டையை கவனமாக மிசினில் கொடுத்திருந்தால் கை உள்ளே மாட்டாது என்றால் கவனமாக செய்தேன் ஆனால் மட்டையை உள்ளே கொடுக்கும் போது மிசினில் கை மாட்டிக் கொண்டது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் நீங்கள் கவனக்குறைவாக வளையல் போட்டு மிசினில் மட்டையை விட அதிக நீளமாக கையை உள்ளே விட்டதால் தான் கை மாட்டிக் கொண்டது என்றால் இல்லை, அன்றைய தினம் நான் வளையல் போடவில்லை. உங்களுக்கு கொடுக்காத வேலையை செய்து விட்டு கவனக்குறைவாக பேசி கொண்டுமிசினில் கை விட்டிர்கள் என்றாலும் அதனால் விபத்து நடந்தது என்றாலும் மிசின் சத்தத்தில்பேசினாலும் காது கேட்காது. உங்களை எந்த வேலைக்கு எடுத்தார்களோ அந்த வேலையை மட்டும் செய்யாமல் மிசினை ஆப்ரேட் செய்து விபத்து ஏற்படுத்தி கொண்டிர்கள் என்றால் எனக்கு மிசின் ஆப்ரேட் செய்ய தெரியும்.விபத்து நடந்த உடன் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் GH க்கு போகும் வரை தெரியாது.

4. கம்பெனியின் உரிமையாளர் ரூ.1.50 லட்சம் அவரது கிரடிட் கார்டில் மருத்துவ செலவு செய்த விவரம் தெரியும் என்றால் ரூ 60000/– செலவு செய்துள்ளார். இன்னொரு ஆப்ரேசன் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்., அதை கூட செய்யவில்லை. 30000/– போட்டுஆப்ரேசன் செய்ய வேண்டும் என்ற சொன்ன நிலையில் அதை கூட செய்யவில்லை.
5. விவசாயம் பணி செய்யும் தொழில் செய்வதற்கு முன் Software company ல் நல்ல வேலை செய்து வருமானம் ஈட்டி வந்த விவரம் தெரியும் என்றால தெரியும். விவசாயத்தின் மீதுள்ள ஈடுபாட்டின் காரணமாக தான் இந்த தொழில தொடங்கினார் என்றாலும் அங்கு பெண்கள் தான் அதிகமாக வேலை செயது வந்தார்கள் என்றாலும் சரிதான். அந்த மிசினின் அருகில் தான் On off பட்டன் இருக்கும் என்றாலும் அந்த பதட்டத்தில் பட்டன்களை நிறுத்தவில்லை என்றாலும் என் இடது கை மிசினில் மாட்டிக் கொண்டது, பட்டன் இடது புறம் உள்ளதால் வலது கையை கொண்டு ஆப் செய்ய

எட்டவில்லை , அதனால் அவர் மாமா வந்து பட்டன் ஆப் செய்தார்.

6. நீங்கள வலக்கை பழக்கம் கொண்டவர் என்றால் ஆமாம். மிசினில் மட்டையை கொடுக்கும போது வலது கையில் கொடுத்திருந்தால் இடது கை சும்மாதான் இருந்திருககும் அப்போது பட்டனை ஆப் செய்திருக்கலாம் என்றாலும் இல்லை, வலது கையில் மட்டையை எடுத்து இடது கையால் மிசினில் கொடுப்போம். மட்டையை எடுத்து வலது கையாலே எடுத்து வலது கையால் கொடுக்க முடியும் என்றால் ஒரு கையால் எடுத்து மற்றொரு கையால் தான் தள்ள முடியும். உங்களுக்கு விபத்து ஏற்பட்டது பின்னிட்டு எதிரியானவர் உங்கள் மீதுள்ள கவனத்தால் அவர் தனியார் மருதததுவமனையில் கொண்டு சென்று சிகிச்சை செய்தார் என்றாலும் உங்கள் குடும்பத்தார்அரசியல் கட்சிகாரர்களுடன சேர்ந்து செய்த பிரச்சனையால் தற்போது மில் மூடும் நிலைமைக்கு வந்து விட்டது என்றாலும் இல்லை தற்போதும் பெதப்பம்பட்டியில் மில் இயங்கி கொண்டுள்ளது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் அவர் வாழ்வாதாரத்தை இழந்து வேறு வேலைக்கு சென்று வருகிறார் என்றால் இல்லை அவர் பார்ட்னராக உள்ளார். விபத்திற்கு காரணம் உங்களுடைய கவனக்குறைவும் அஜாக்கிரதையும் சொல் பேச்சு கேளாமல் இருந்து மிசினை இயக்கியது தான் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com B,L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மூக்கைய தேவர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.07.2025.

<u>**311** குவிமுச மனுவின் பேரில்  எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் என்ன வேலை செய்து வருகிறிர்கள் என்றால் டிரைவராக உள்ளேன். உங்கள் மனைவி வெகு நாட்களுககு பிறகு சம்பவ தேதியன்று தான வேலைக்கு சென்றார் என்றால் ரொம்ப நாளாக வேலைக்கு சென்று வருகிறார். நடந்த விபத்து நேரடியாக தெரியாது என்றாலும் கேள்வி பட்டு தான் தெரியும் என்றாலும் சரிதான். மேற்படி விபத்து ஏற்பட்ட உடன் உடுமலை அரசு மருத்துவமனையில் முடியாது என்று சொல்லியஉடன் கோவை தனியார் மருத்துவமனையில் கம்பெனிகாரர் தான் சேர்த்து மருத்துவ செலவு பார்த்து வந்தார் என்றால் சரிதான். உங்கள் மனைவிக்கு அந்த நிறுவனத்தில் ஏற்கனவே கற்பகம் என்பவர் அந்த வேலையை செய்து வந்தநிலையில் உங்கள் மனைவி தானாக முன் வந்து அந்த வேலையை செய்து விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் இல்லை. உங்கள் மனைவி கவனமாக மட்டையை கொடுத்திருந்தால் விபத்து நடந்திருககாது என்றால் அவரக்க அதிக அனுபவம் உள்ளது. அதிக அனுபவம் உள்ளதாக உள்ள நம்பிக்கையால் தான் விபத்து

நடந்தது என்றால் இல்லை நம்பிக்கையாக வேலை செய்தார். விபத்திற்கு முழுகாரணம் உங்கள் மனைவியின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் சொல்பேச்சு கேளாமையும் தான் காரணம் என்றால் இல்லை. உங்களது மனைவியால் ஏற்படுத்தப்பட்ட விபத்திற்கும் கம்பெனி ஓனரான எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் இல்லை. நீங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பணபறிப்பதற்காக பொய்யாக வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com B,L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.